# பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## ஏலங்களுக்கான அழைப்பு (IFB)

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்நாட்டலுவல்கள் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு உத்தியோகபூர்வ மின்னஞ்சல் சேவையொன்றைக் கொள்வனவு செய்தல்

**HA/F/PRO/05/e-GN/Proc-5**

1. பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கொள்முதல் குழுவின் (MPC) தலைவர், மேற்படி கொள்வனவுக்காக தகுதி வாய்ந்த ஏலதாரர்களிடமிருந்து சீல் செய்யப்பட்ட ஏலங்களை இங்ஙனம் அழைக்கிறார்.

2. பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, அமைச்சுடன் கலந்தாலோசித்து ஒரு (01) வருட காலத்திற்கு 15,000 பயனர் கணக்குகளைக் கொண்ட உத்தியோகபூர்வ அரசாங்க மின்னஞ்சல் சேவையை செயற்படுத்த கிளவுட் உட்கட்டமைப்பு (Cloud Infrastructure) மற்றும் மனித வளங்கள் உள்ளிட்ட அதன் வளங்களைப் பயன்படுத்தும் திறன் கொண்ட நிபுணத்துவம் வாய்ந்த மின்னஞ்சல் சேவை வழங்குநர் ஒருவரின் சேவையை நாடுகிறது.

3. 2006 ஆம் ஆண்டில் தேசிய கொள்முதல் முகவராண்மையால் (National Procurement Agency) வெளியிடப்பட்ட கொள்முதல் வழிகாட்டுதல்களில் வரையறுக்கப்பட்டுள்ள தேசிய போட்டி ஏல நடைமுறையைப் **(National Competitive Bidding)** பயன்படுத்தி ஏலம் நடத்தப்படும்.

4. தகுதித் தேவைப்பாடுகள் பின்வருமாறு:

   i. ஏலதாரர் இலங்கையில் சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட சேவை வழங்கும் நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
   ii. நிறுவனம் மற்றும் அதன் கூட்டு முயற்சி பங்கு ஏலாதாரர்கள் (இருப்பின்) இதே போன்ற சேவைகளை வழங்குவதில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
   iii. ஏற்புடைய ஏலதாரர் கடந்த ஐந்து ஆண்டுகளில் இதே தன்மை மற்றும் திறன் கொண்ட குறைந்தபட்சம் மூன்று கருத்திட்டங்களை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும்.
   iv. கடந்த ஐந்து (05) ஆண்டுகளுக்குள் குறைந்தது 1,500 மின்னஞ்சல் கணக்குகளைக் கொண்ட கருத்திட்டமொன்றின் நிறுவல் (Installation) கட்டமைப்பு (Configuration) மற்றும் பராமரிப்பு (Maintenance) ஆகியவற்றில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
   v. சராசரி வருடாந்த வருமானம் ரூபா 25 மில்லியனுக்கும் அதிகமாக இருத்தல் வேண்டும்.
   vi. கூட்டு முயற்சி நிறுவனமாக ஏலங்களை சமர்ப்பிப்பது அனுமதிக்கப்படுகிறது, அதே நேரத்தில் அத்தகைய கூட்டு முயற்சிகளின் அனைத்து தரப்பினரும் இலங்கையில் சட்டப்பூர்வமாக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களாக இருக்க வேண்டும். இந்த வகை ஏலத்தின் கீழ், ஒரு தரப்பினர்

மின்னஞ்சல் கணக்குகளை நிர்வகிப்பதற்கு கட்டாயமாக பொறுப்பாக இருக்க வேண்டும், அதே நேரத்தில் மறு தரப்பினர் இலங்கையின் புவியியல் எல்லைக்குள் அமைந்துள்ள தொடர்புடைய உரிமங்களுடன் கிளவுட் உட்கட்டமைப்பை எளிதாக்க போதுமான தொழிநுட்ப திறனைக் கொண்டிருக்க வேண்டும்.

vii. ஏலப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட காலக்கெடுவின் பின்னர் தொண்ணூற்று ஒன்று (91) நாட்களுக்கு செல்லுபடியாவதுடன் ஏல ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் ரூபா 400,000/- தொகைக்கான ஏலப் பாதுகாப்பு அனைத்து ஏலப் பத்திரங்களும் இணைக்கப்படல் வேண்டும்.(ஏலப் பாதுகாப்பு **2023.06.07** வரை செல்லுபடியாகும்) (119)

5. **2023.01.25** முதல் **2023.02.07** வரையான காலப்பகுதியில் **வேலை நாட்களில் மு.ப 09.00** மணி முதல் **பி.ப 15.00** மணி வரை கீழே உள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பித்து, **திருப்பிச் செலுத்தப்படாத கட்டணமாக ரூ.10, 000/-** செலுத்துவதன் மூலம் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான ஏல ஆவணமொன்றை வாங்கலாம். பணம் மூலமான கொடுப்பனவு **இந்த அமைச்சின் நிதிப் பிரிவில்** மேற்கொள்ளப்பட வேண்டும்.
6. ஏலதாரர்கள் மேலதிக தகவல்களை கணக்காளர் (கொள்முதல்), பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, 16 வது மாடி, "நில மெதுர", எல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்ட, தொலைபேசி: 0112 050414 தொலைநகல்: 0112369181, மின்னஞ்சல்: procurement@moha.gov.lk /procurement.ha@gmail.com இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
7. ஏலங்களை **செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, 16 வது மாடி, "நில மெதுர", எல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்டி** என்ற முகவரிக்கு **2023.02.08 பி.ப 14.00 மணி** இல் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.
8. தாமதமாக மற்றும் இலத்திரனியல் முறையில் அனுப்பப்படும் ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது நிராகரிக்கப்படும்.
9. **"நில மெதுர" 16வது மாடியில் உள்ள நிதிப் பிரிவில்,** ஏலதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில், ஏலங்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவுக்குப் பிறகு உடனடியாக ஏலங்கள் திறக்கப்படும்.
10. ஏலங்களைத் தயாரிப்பது அல்லது சமர்ப்பிப்பது தொடர்பாக ஏலதாரர்களுக்கு ஏற்படும் செலவுகளுக்கு அமைச்சகம் பொறுப்பேற்காது.

**தலைவர்**
**அமைச்சின் கொள்முதல் குழு,**
**பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
"நில மெதுர",
எல்விட்டிகல மாவத்தை,
நாரஹேன்பிட்ட
கொழும்பு - 05
2023.01.25